IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.25 /2015
Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மஞ்சுளா | Caste | : - |
| Husband Name | : பாஸ்கரன் | Calling | : - |
| Village | : அம்முண்டி கிராமம் | Religion | : - |
| Town | : காட்பாடி தாலுக்கா | Age | : 51 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 30 day of August, 2023.

Chief Examination

1. நான் இந்த வழக்கின் 1ம் வாதி. நான் எனக்காகவும் மற்ற வாதிகளுக்கும் சேர்த்து எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும். படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். 5.10.2006 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திர எண்.6021/2006-ன் அசல் வா.சா.ஆ1 ஆகும். 2005 - 2009 காலகட்டத்திற்கான என் கணவர் பாஸ்கரன் பெயரிலான குடும்ப அட்டையின் நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது வா.சா.ஆ2 ஆகும்.

2. என் கணவர் பாஸ்கரனின் இறப்பு சான்றிதழின் உண்மை நகல் வா.சா.ஆ3 ஆகும். என் கணவர் பாஸ்கரனின் வாரிசு சான்றிதழின் உண்மை நகல் வா.சா.ஆ4 ஆகும். தமிழ்நாடு அரசு நிலஅளவை ஆவண வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு துணை வட்டாட்சியரின் சான்றொப்பமிட்டு வழங்கப்பட்ட அம்முண்டி கிராம கூட்டுப்பட்டா எண்.1477-ன் நகல் வா.சா.ஆ5 ஆகும். தமிழ்நாடு அரசு நிலஅளவை ஆவண வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு துணை வட்டாட்சியரின் சான்றொப்பமிட்டு வழங்கப்பட்ட அம்முண்டி கிராம கூட்டுப்பட்டா எண்.1709-ன் நகல் வா.சா.ஆ6 ஆகும்.

3. தமிழ்நாடு அரசு நிலஅளவை ஆவண வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு துணை வட்டாட்சியரின் சான்றொப்பமிட்டு வழங்கப்பட்ட அம்முண்டி கிராம கூட்டுப்பட்டா

எண்.2041-ன் நகல் வா.சா.ஆ7 ஆகும். தமிழ்நாடு அரசு நில அளவை ஆவண வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு துணை வட்டாட்சியரின் சான்றொப்பமிட்டு வழங்கப்பட்ட அம்முண்டி கிராம கூட்டுப்பட்டா எண்.1372-ன் நகல் வா.சா.ஆ8 ஆகும். என் மாமனார் பாலசுப்பிரமணியன் பெயரிலான கிஸ்து ரசீதுகளின் அசல் (எண்ணிக்கை-5) வா.சா.ஆ9 ஆகும்.

4. என் மாமனாரின் அப்பா முத்து முனியப்ப செட்டியார் பெயரிலான மின் இணைப்பு எண்.241-க்குரிய மின்கட்டண அட்டையின் அசல் வா.சா.ஆ10 ஆகும். என் மாமனார் பாலசுப்பிரமணியன் பெயரிலான பட்டா பாஸ்புத்தகத்தின் அசல் வா.சா.ஆ11 ஆகும். 6.5.2013 அன்று வேலூர் மாவட்ட காவல் அலுவலகத்திலிருந்து என் மாமனாரின் பெயருக்கு வழங்கப்பட்ட பார்வையாளர் வருகை ரசீதின் அசல் வா.சா.ஆ12 ஆகும். 23.5.2013 அன்று பிரதிவாதிகளுக்கு என் மாமனார் வழக்கறிஞர் மூலம் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ13 ஆகும்.

5. மேற்படி அறிவிப்பினை 1ம் பிரதிவாதி கோட்டீஸ்வரன் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ 14 ஆகும். மேற்படி அறிவிப்பினை 2ம் பிரதிவாதி தினகரன் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ15 ஆகும். 30.5.2013 அன்று 1, 2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ16 ஆகும். 4.6.2013 அன்று மேற்படி பதில் அறிவிப்பிற்கு வழக்கறிஞர் மூலம் என் மாமனார் அனுப்பிய ரிஜாய்ண்டரின் வழக்கறிஞர் அலுவலக நகல் வா.சா.ஆ17ஆகும்.

6. மேற்படி ரிஜாய்ண்டர் அறிவிப்பினை 1,2 பிரதிவாதிகளின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ18 ஆகும். 17.6.2013 அன்று என் மாமனார் வழக்கறிஞர் மூலம் 1 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய நினைவுறுத்தல் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ19 ஆகும். அதனை 1ம் பிரதிவாதி

பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ20 ஆகும். 4ம் பிரதிவாதி அதனை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ21 ஆகும்.

7. 19.6.2013 அன்று 1ம் பிரதிவாதி அவரது வழக்கறிஞர் முலம் அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ22 ஆகும். 28.9.2013 அன்று என் மாமனார் அனுப்பிய தகவல் கோரும் மனுவினை 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ23 ஆகும். காட்பாடி கோட்ட செயற்பொறியாளர்/பொது தகவல் அலுவலர் கடந்த 26.10.2013 அன்று தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ் அளித்த பதிலின் அசல் வா.சா.ஆ24 ஆகும்.

8. 16.11.2013 அன்று என் மாமனார் மேல்முறையீடு அலுவலகத்தில் அளித்த மேல்முறையீட்டு மனுவினை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டையின் அசல் வா.சா.ஆ25 ஆகும். தாவாபடி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.